**நாள் : 20.12.2023**

## **அசல் வழக்கு எண்: 64 /2020**

வா.சா.-1 முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

பிரதிவாதி எனக்கு சொந்தமான தாவா சொத்தை அபகரித்து விட்டார் . அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் . 29.102015-ல் பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டார். நான் அப்போது சென்னையில் இ ருந்தேன். 10 நாட்கள் கழித்து நான் ஊருக்கு வந்தேன். தாவா இ டத்தில் நான் பயிர் செய்த தென்னை மரங்கள் இருந்தது . அங்கு சென்று பார்த்தபோது 17 தென்னை மரங்கள் இருந்தது . எனது அப்பா காலத்தில் தென்னை மரங்கள் பயிரிடப்பட்டது. நான் தென்னை மரங்கள் பயிரடப்படவில்லை . குறிப்பிட்டு எத்தனை மரங்கள் பயிரடப்பட்டுள்ளது என்பது குறித்து குறிப்பிட்டு சொல்ல இயலாது . தாவா சொத்து எனது அப்பா வழி தாத்தா நாராயணசாமி என்பவருக்கு சொந்தமானது ஆகும். அவர் இறந்துவிட்டார். எப்போது இற்நதார் என்பது எனக்கு தெரியாது . நாராயணசாமிக்கு இரண்டு மனைவிகள் . எனது தகப்பனார் முதல் மனைவியின் மகன் ஆவார் . இரண்டாவது மனைவிக்கு 5 பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒருவரை தவிர 4 நபர்கள் உயிருடன் உள்ளனர். மேற்கண்ட 4 நபர்களுக்கும் பூர்வீகம் ஆலங்கோட்டை ஆகும் . அங்குதான் குடியிருந்து வருகிறார்கள் . எனது அப்பா என்னுடன் தான் உள்ளார் . எனது அப்பா நல்ல உடல்நிலையுடன் தான் இருஜக்கிறார் . வாய் பேசமுடியாது. காது கேட்காது. எனது வீட்டிற்கு பக்கத்து தெருவில்ப பிரதிவாதி வீடு உள்ளது . ஒரே ஊரில் தான் வசித்து வருகிறோம் . எனது வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் இடையே சுமார் 1 கிலோமீட்டர் துரம் இருக்கும். நான் ஊரில்தான் உள்ளேன். விவசாய வேலை செய்து வருகிறேன். பிரதிவாதி குடும்பம் குறித்து எனக்கு நன்கு தெரியும் . அவரது கணவர் இறந்துவிட்டார். பிரதிவாதியின் மாமனார் மாயகிருஷ்ணன் ஆவார் . அவரும் இறந்துவிட்டார். மாயகிருஷ்ணனுக்கு பிரதிவாதயின் கணவரும் மற்றொரு நபரும் வாரிசுகள் ஆவார்கள் . இருவரும் இறந்துவிட்டார்கள். எனது சித்தப்பா பெயர் கோவிந்தராஜ். அவர் பேரையூர் அருகில் ஓவேல்குடியில் இருக்கிறார். ஓவேல்குடியிலிருந்து சுமார் 10 மீட்டர் தூரதம்தில் இருந்தார். எனது சித்தப்பா தாவா சொத்து உள்ள கிராமத்திற்கு வந்து செல்வது வழக்கம்.

*கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தனது தரப்பு வாதியிடம் சங்கதிகளைப் பெற்று பின்னர் குறுக்கு விசாரணை யை தொடர அனுமதி கேட்கிறார் . நீதிநலன் கருதி குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.*

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi(FAC).